# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 93/மா/2024**
**நாள்: 01.12.2025**

S. பாலாஜி
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 11, --- எதிர்மனுதாரர்
பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை–87, ஜானகி நகர், வளசரவாக்கம், பிரகாசம் சாலை, நவீன் அபார்ட்மெண்ட், எண் 6B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. பாலாஜி என்பவரின் 14.03.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.03.2024 அன்று பெறப்பட்டு 93/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–87, ஜானகி நகர், வளசரவாக்கம், பிரகாசம் சாலை, நவீன் அபார்ட்மெண்ட், எண் 6B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. பாலாஜி என்பவர் தனது 14.03.2024 நாளிட்ட முறையீட்டு மனுவுடன் அனுப்பியுள்ள 21.12.2023 நாளிட்டு மண்டல அலுவலர், மண்டலம் 11, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முகவரியிட்ட மனுவில் பின்வரும் புகாரினை தெரிவித்துள்ளார்:-

"This is regarding my complaint related to the poor quality of Tarred road constructed at Chennai Municipal Corporation Zone 11 Ward 152, Suresh Nagar Main Road, Chowdry Nagar, 5th Street which is just completed 45 days ago and now turned into a deadly nightmare for public and motorist due to the pits and deformed structure in just few days of its construction due to poor quality.

I regret to inform I have reported it multiple times through various mediums upto the Commissioner of Greater Chennai Corporation. As a tax paying citizen of India and as a lawyer I have exhausted all the possible mediums to bring this public welfare issue to the notice of the Greater Chennai Corporation.

It is crucial that the Greater Chennai Corporation ensures the well-being and safety of its residents by maintaining the integrity of its infrastructure. I Trust that prompt action on your part will alleviate the current issues and prevent similar occurances in the future before any fatalities occur." எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 13.08.2024 நாளிட்ட அறிவிப்பு மற்றும் 27.03.2025 நாளிட்ட நினைவூட்டு கடிதம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11–ன் உதவி ஆணையர் முதுநிலை தனது 24.10.2025 நாளிட்ட அறிக்கை ம.அ.11 ந.க. எண்.இ3/959/2025–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி கோட்டம் 152, பகுதி 33 மண்டலம் 11க்கு உட்பட்ட சுரேஷ் நகர் பிரதான சாலை மற்றும் சௌத்ரி நகர் 5வது தெருவில் புதிதாக தார்சாலை அமைக்கப்பட்டது. இச்சாலை அமைப்பதற்கு முன் பெருநகர சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் மூலம் புதியதாக குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்புகள் இணைக்கப்பட்டது. இப்பணிகள் பெருநகர சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தால் முடிக்கப்பட்டு சாலை வெட்டினை உடனடியாக சீரமைத்து பெருமக்கள் பருவமழை காலத்தில் சிரமமின்றி இச்சாலையை உபயோகிக்க ஏதுவாக புதிய சாலை சீரமைக்கப்பட்டது.

மேலும் இச்சாலையில் பெருமழை காரணமாக தண்ணீர் சேகரமானதால் பருவமழை காலத்தில் சாலை வெட்டு செய்யப்பட்ட சில இடங்களில் சிறிது பள்ளம் ஏற்பட்டது. இக்குறைபாடானது உடனடியாக மாநகராட்சியால் சீரமைக்கப்பட்டு மறு சீரமைப்பு செய்யப்பட்டு பொதுமக்கள் சிரமமின்றி உபயோகிக்க வகை செய்யப்பட்டு தற்சமயம் வரை நல்ல நிலையிலேயே பராமரிக்கப்பட்டு வருகிறது. இதற்கான ஆதாரமாக புகைப்படங்கள் இத்துடன் இணைத்து தங்களின் கனிவான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே மேற்கூறிய விவரங்களின் அடிப்படையில் இப்புகாரினை கைவிடுமாறு பணிந்து கேட்டுக் கொள்ளப்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.11.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 31.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 07.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6. சென்னை பெருநகர மாநகராட்சி மண்டல 11–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 07.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

"மனுதாரரின் மனு மீது உரிய கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கோட்டம் 152, பகுதி 33 மண்டலம் 11க்கு உட்பட்ட சுரேஷ் நகர் பிரதான சாலை மற்றும் சௌத்ரி நகர் 5வது தெருவில் புதிதாக தார்சாலை அமைக்கப்பட்டது. இச்சாலை அமைப்பதற்கு முன் பெருநகர சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் மூலம் புதியதாக குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்புகள் இணைக்கப்பட்டது. இப்பணிகள் பெருநகர சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தால் முடிக்கப்பட்டபோது சாலையில் ஏற்பட்ட வெட்டினை உடனடியாக சீர் அமைக்கப்பட்டது.

மேலும் இச்சாலையில் பருவமழை காலத்தில் தண்ணீர் சேகரமானால் சாலை வெட்டு செய்யப்பட்ட சில இடங்களில் சிறிது பள்ளம் ஏற்பட்டது. இதனை உடனடியாக மாநகராட்சியால் மறு சீரமைப்பு செய்யப்பட்டு பொதுமக்கள் சிரமமின்றி உபயோகிக்க வகை செய்யப்பட்டு தற்சமயம் வரை நல்ல நிலையிலேயே பராமரிக்கப்பட்டு வருகிறது என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்துடன் மேற்கண்ட தார் சாலை சீரமைக்கப்பட்ட புகைப்பட நகலினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கிறோம்."

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11–ன் உதவி ஆணையர் முதுநிலை அவர்களின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் சமர்பிக்கப்பட்ட புகைப்படம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர், பெருநகர் சென்னை மாநகராட்சி மண்டலம் 11 கோட்டம் 152ல் உள்ள சுரேஷ் நகர் பிரதான சாலை மற்றும் சௌத்ரி நகர் ஐந்தாவது தெருவில் 45 நாட்களுக்கு முன் அமைக்கப்பட்ட தார்ச்சாலையானது தரமற்ற முறையில் அமைக்கப்பட்ட காரணத்தினால் பொதுமக்கள் மற்றும் இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு மிகவும் சிரமத்தை தருவதாக உள்ளது என்பதும், இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுத்தால் தான், தரமற்ற சாலையினால் ஏற்படும் விபத்தினால் வரும் உயிரிழப்புகளை தடுக்க இயலும் என்பது மனுதாரரின் மனுவின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின் மனு மீதான உரிய கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி, கோட்டம் 152, பகுதி 33 மண்டலம் 11க்கு உட்பட்ட சுரேஷ் நகர் பிரதான சாலை மற்றும் சௌத்ரி நகர் 5வது தெருவில் புதிதாக தார்சாலை அமைப்பதற்கு முன் பெருநகர சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் மூலம் புதியதாக குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்புகள் இணைக்கப்பட்டு, இப்பணிகள் பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தால் முடிக்கப்பட்டபோது சாலையில் ஏற்பட்ட வெட்டினை உடனடியாக சீரமைக்கப்பட்டது என்பதும், இச்சாலையில் பருவமழை காலத்தில் தண்ணீர் சேகரமானால் சாலை வெட்டு செய்யப்பட்ட சில இடங்களில் ஏற்பட்ட பள்ளத்தினை மாநகராட்சியால் உடனடியாக மறு சீரமைப்பு செய்யப்பட்டு, தற்சமயம் வரை நல்ல நிலையிலேயே பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11–ன் உதவி ஆணையர் முதுநிலை அவர்களின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தெரிவித்த சுரேஷ் நகர் பிரதான சாலை மற்றும் சௌத்ரி நகர் 5வது தெரு சாலை புதியதாக அமைக்கப்படுவதற்கு முன் பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தால் பணிகள் முடிக்கப்பட்ட போது ஏற்பட்ட பள்ளம் சீரமைக்கப்பட்டு, தற்போது நல்ல நிலையில் உள்ளது என்றும், மழைக் காலங்களில் சாலை வெட்டுகளில் சேகரமாகும் மழைநீர் வெளியேற்றப்பட்டு சாலை சீரமைக்கப்பட்டுள்ளது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11–ன் உதவி ஆணையர் முதுநிலை–ன் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்து இருந்தாலும், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, வார்டு 152, சுரேஷ் நகர் பிரதான சாலை மற்றும் சௌத்திரி நகர் 5வது தெரு சாலையில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள தார் சாலையின் தரத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11–ன் செயற்பொறியாளர் தலைமையில் ஆய்வு செய்து, அவ்வாய்வு அறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை

மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 01–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S. பாலாஜி,வழக்கறிஞர்,
எண் 613, நவீன் அபார்ட்மெண்ட்,
பிரகாசம் சாலை, ஜானகி நகர்,
வளசரவாக்கம்,
சென்னை–600 087.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) உதவி ஆணையர் (முதுநிலை), மண்டலம் 11,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 123, ஆற்காடு சாலை,
வளசரவாக்கம்,
சென்னை–600 087.

(4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

2/12/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

2.12.25 1/10